**முதன்மை சார்பு நீதிமன்றம், கிருஷ்ணகிரி மாவட்டம்**

**முன்னிலை: திரு.என்.மோகன்ராஜ், பி.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, கிருஷ்ணகிரி.**

**2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27– ஆம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண். 219/2023**

**CNR.No.TNKI03-001108-2023**

பெருமாள் ... வாதி

// எதிர் //

ஜி. அமாசி ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 19.11.2024–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வெங்கடசாமி, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரையைக் கேட்டும், சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் நன்கு பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையின் கீழிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ஒரு தலைபட்ச:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ.2,00,000/– வட்டியுடன் சேர்த்து ரூ.3,43,867/– யை திரும்ப செலுத்த உத்தரவிடக்கோரியும், மேற்படி அசல் புரோநோட்டுக்குண்டான கடன் தொகையான ரூ.2,00,000/– த்திற்கு 24% வட்டி விகிதம் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து வசூலாகும் தேதி வரையில் பிரதிவாதி செலுத்த உத்தரவிடவேண்டியும் மற்றும் இவ்வழக்குச் செலவுத் தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:**

வாதியிடம் பிரதிவாதி கடந்த 19.07.2020−ஆம் தேதியில் பிரதிவாதி குடும்ப செலவிற்காகவும், கடன்களை தீர்க்கவேண்டியும் ரூ.2,00,000/− த்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/−க்கு ரூ.2.00 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டும், வாதி கேட்கும்போது திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனை பெற்றுள்ளதாகவும், மேற்படி கடனுக்காக பிரதிவாதி வாதி பெயருக்கு ஒரு கடனுறுதிச்சீட்டினை எழுதிக்கொடுத்துள்ளதாகவும், இந்நிலையில் மேற்படி கடனை வாதி திரும்ப பல முறை கேட்டும் திருப்பி செலுத்தாமல் வீண் காலம் கடத்திவந்துள்ளதாகவும், பின்னிட்டு வாதி பிரதிவாதிக்கு 15.07.2023 ஒரு சட்ட அறிவிப்பினை அனுப்பியதாகவும், பிரதிவாதி சட்ட அறிவிப்பினை 18.07.2023 இல் பெற்றுக்கொண்டும் வாதியின் கடனை திரும்ப செலுத்த எந்த நடவடிகக்கையும் மேற்கொள்ளாததால் வாதி மேற்படி கடனை திரும்ப செலுத்த வேண்டி பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**3.** பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

**4.** வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ−3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் ஏதுமில்லை.

**5**. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வழக்கில் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

## 6. தீர்வு

i. வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி வாதியிடம் ரூ.2,00,000/− தொகையை 19.07.2020 அன்று கடனாக பெற்றதாகவும், அதற்காக வா.சா.ஆ−1 தாவா புரோநோட்டை எழுதிக்கொடுத்ததாகவும், வழக்குரையில் தெரிவித்திருக்கிறார். வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்க்கும் போது பிரதிவாதி 19.07.2020−ம் தேதி தாவா

புரோநோட்டை வாதிக்கு எழுதிக்கொடுத்திருப்பது தெரியவருகிறது.

ii. நீதிமன்றத்தில் இருந்து வழக்கு சம்பந்தமாக அழைப்பாணை அனுப்பப்பட்டும், பிரதிவாதி அதை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜரில்லாமல் இருந்துள்ளார். அதன் பிறகு இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமலும் இருந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

iii. மேற்படி தாவா புரோநோட்டை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சாட்சியமும் அளித்திருக்கிறார். சாட்சிய சட்டம் பிரிவு 68–ன் கீழ் குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மட்டுமே அதில் சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் சாட்சியாக அவசியம் விசாரணை செய்யப்படவேண்டும். மேற்படி தாவா புரோநோட்டிற்கு அதில் சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் விசாரிக்கப்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வா.சா.1 சாட்சியத்தை மறுக்க எந்த மூகாந்திரமும் இல்லை. பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் தனது வழக்கை நிரூபிக்க தவறியிருப்பதும் இங்கு தெளிவாகிறது. Sivaprakasam Vs Dhandapani 2012 Vol 5 CTC 395 வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமானது வாதி கடனுறுதிச்சீட்டினை பிரதிவாதி நிறைவேற்றிக் கொடுத்தார் என்பதை நிரூபித்தல் போதுமானது என்றும் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் Under Section 118 (a) of Negotiable Instrument Act, ன் படி பிரதிவாதி அதனை மறுத்து பொய்ப்பிக்காத வரையில் பிரதிவாதிக்கு எதிராகவே அனுமானம் மேற்கொள்ள இயலும் என்றும் இச்சூழ்நிலையில் வா.சா.ஆ.1 ஆவணம் வாதி சொல்வதுபோல் ரூ.2,00,000/– கடனுக்காகத்தான் பிரதிவாதிக்கு வாதிக்கு எழுதி கொடுத்திருக்கிறார் என்றும், மேற்படி கடனை திரும்ப செலுத்தாமல் இருந்துள்ளார் என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

முடிவாக, வாதி வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

(i) வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையான ரூ.3,43,867/- (ரூ.2,00,000/- மற்றும் வட்டி) வழங்கவேண்டுமென்றும், தாவா அசல் தொகையான ரூ.2,00,000/- த்திற்கு வழக்கு தாக்கலான தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டு ஒன்றுக்கு 9 சதவிகித பின்வட்டி செலுத்த வேண்டுமென்றும்,
(ii) மேலும், தாவா அசல் தொகையான ரூ.2,00,000/- க்கு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செலுத்தப்படும் தேதி வரை 6 சதவிகித வட்டியும் செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஒம்/-என்.மோகன்ராஜ்)**
**முதன்மை சார்பு நீதிபதி,**
**கிருஷ்ணகிரி.**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**:-

வா.சா.1 - பெருமாள்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**:-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.07.2020 | பிரதிவாதி வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த கொடுத்த ரூ.2,00,000/-திற்கான கடனுறுதி சீட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | 15.07.2023 | சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | | சட்ட அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான Tracking report |

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்</u>** :- ஏதுமில்லை

**(ஒம்/-என்.மோகன்ராஜ்)**
**முதன்மை சார்பு நீதிபதி,**
**கிருஷ்ணகிரி.**